TNTS090006442020

மாண்பமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சங்கரன்கோவில்.

**முன்னிலை : திரு.M. மாரி, M.S.W., L.L.B.,**

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

சங்கரன்கோவில்.

2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11– ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

**C.C.No.229/2020**

அரசுக்காக: உதவி காவல் ஆய்வாளர்,
குருவிகுளம் காவல் நிலையம்
(குருவிகுளம் காவல் நிலைய குற்ற எண்.384/2018)

……… குற்றமுறையீட்டாளர்

/எதிர்/

**கண்ணன்,**
த/பெ. பெரியபாண்டி,
கீழ அழகுநாச்சியாபுரம்.

……. எதிரி

| | | |
|---|---|---|
| **1.** | Case Number | CC No229/2020 |
| **2.** | Name of the Police Station and Crime Number | Kuruvikulam Police Station<br>Crime No.384/2018 |
| **3.** | Name of the Accused | Kannan |
| **4.** | Date of Occurrence | 30.12.2018 |
| **5.** | Date of surrender | 03.01.2019 |
| **6.** | Date of Arrest | -- |
| **7.** | Period of remand | -- |
| **8.** | Date of release on bail | 03.01.2019 |
| **9.** | Date of filing final report | 29.07.2020 |
| **10.** | Date of Commencement of trial | 23.07.2026 |
| **11.** | Date of Chief examination | PW1 23.07.2026 |

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | | PW2 | 23.07.2026 |
| **12.** | Date of Cross examination | PW1 | 23.07.2026 |
| | | PW2 | 23.07.2026 |
| **13.** | Date of Conclusion of trial | 30.07.2026 | |
| **14.** | Plea of the accused | Not guilty | |
| **15.** | Finding of the Court | The accused is found not guilty for the offences u/s.294(b), 324 of IPC and Section 4 of TNPHW Act and therefore the accused is acquitted under Section 248(1) Cr.P.C. | |

கடந்த 25.08.2020 தேதியன்று இந்நீதிமன்றத்தின் ஆண்டுப்பட்டிகை எண். 229/2020 ஆக கோப்பில் எடுக்கப்பட்டு, அரசுக்காக குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை –1 திரு.R.மகிழ்வண்ணன், B.Com.,B.L., (பொறுப்பு) அவர்களும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.G.கண்ணன், B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும் இவ்வழக்கானது 11.08.2026 அன்று என் முன்னர் இறுதி விசாரணைக்கு வரப்பெற்று ஆவணங்களை பரிசீலனை செய்து, இந்நீதிமன்றம் வழங்கும் ...

**தீ ர் ப் பு ரை**

இவ்வழக்கானது குருவிகுளம் காவல் நிலையத்தார் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 324 மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்ற எண். 384/2018–ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள கு.வி.மு.ச. பிரிவு 173(2)–ன் கீழ் இறுதி அறிக்கையை நீதிமன்றம் கவனமுடன் பரிசீலனை செய்து போதுமான காரணம் எதிரி மீது குற்றம் விசாரிக்கத்தக்க முகாந்திரம் உள்ளது என இந்நீதிமன்றம் திருப்தி அடைந்து பின் கு.வி.மு.ச. பிரிவு 190 (1) (b)–ன் கீழ் இவ்வழக்கு நீதிமன்றம் தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டது.

**1. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :**

1.1 இவ்வழக்கின் புகார்தாரர் கடந்த 30.12.2018–ம் தேதி இரவு 19.00 மணிக்கு கீழ அழகுநாச்சியாபுரம் வடக்கு தெருவில் உள்ள அவரது வீட்டு முன்பு உட்கார்ந்து கொண்டிருந்தபோது புகார்தாரரின் வீட்டு முன்பு உள்ள கொடிக்கம்பம் அருகே எதிரி

அமர்ந்து கொண்டு "கண்டாரஓலி மகன்களா தேவிடியா மக்களா உத்திக்கு உத்தி வாங்கடா" என்று கொச்சையாக பேசிக் கொண்டிருந்தவரை பார்த்து புகார்தாரர் பொம்பளபிள்ள மக்கள் இருக்கற இடத்துல ஏண்டா இப்படி அசிங்கமாக பேசுற என்று கேட்டதற்கு எதிரி புகார்தாரரை பெண் என்றும் பாராமல் அந்த பொது இடத்தில் வைத்து அப்படித்தான் பேசவேன் தேவிடியா மகளே என்று அசிங்கமாக பேசி புகார்தாரரை கீழே தள்ளிவிட்டு எதிரி கையில் வைத்திருந்த அரிவாளால் புகார்தாரரின் இடது நெற்றியில் தாக்கி சாதாரண காயங்களை ஏற்படுத்தி, புகார்தாரரின் பெண்மைக்கு பங்கத்தையும், அவமானத்தையும், தெரிவிக்கப்பட்டு, எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 324 மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு குருவிகுளம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்களால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>எதிரிக்கு வழக்கு ஆவணங்கள் வழங்கி, குற்றம் குறித்து வினவிய விபரம் ;–</u>

2.1 இவ்வழக்கின் எதிரிக்கு கு.வி.மு.ச.பிரிவு 204–ன்படி அழைப்பணை அனுப்பி எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும் அரசு தரப்பு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச.பிரிவு 207–ன் கீழ் எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டு, போதிய கால அவகாசம் அளித்து, இரு தரப்பும் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலனை செய்தவகையில் கு.வி.மு.ச. பிரிவு 240(1)–ன் கீழ் எதிரி மீது கீழ்க்கண்டவாறு குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டன.

1) இவ்வழக்கின் புகார்தாரர் கடந்த 30.12.2018–ம் தேதி இரவு 19.00 மணிக்கு கீழ அழகுநாச்சியாபுரம் வடக்கு தெருவில் உள்ள அவரது வீட்டு முன்பு உட்கார்ந்து கொண்டிருந்தபோது புகார்தாரரின் வீட்டு முன்பு உள்ள கொடிக்கம்பம் அருகே எதிரி அமர்ந்து கொண்டு "கண்டாரஓலி மகன்களா தேவிடியா மக்களா உத்திக்கு உத்தி வாங்கடா" என்று கொச்சையாக பேசிக் கொண்டிருந்தவரை பார்த்து புகார்தாரர் பொம்பளபிள்ள மக்கள் இருக்கற இடத்துல ஏண்டா இப்படி அசிங்கமாக பேசுற என்று கேட்டதற்கு எதிரி புகார்தாரரை பெண் என்றும் பாராமல் அந்த பொது இடத்தில் வைத்து அப்படித்தான் பேசவேன் தேவிடியா மகளே என்று அசிங்கமாக பேசிய குற்றத்திற்காக எதிரி மீது இ.த.ச. பிரிவு 294(பி)–ன் கீழ் தண்டிப்பதற்குரிய குற்றம் புரிந்ததாக குற்றச்சாட்டு வனையப்பட்டன.

2) மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக, புகார்தாரரை கீழே தள்ளிவிட்டு எதிரி கையில் வைத்திருந்த அரிவாளால் புகார்தாரரின் இடது நெற்றியில் தாக்கி சாதாரண காயங்களை ஏற்படுத்திய குற்றத்திற்காக எதிரி மீது இ.த.ச. பிரிவு 324–ன் கீழ் தண்டிப்பதற்குரிய குற்றம் புரிந்ததாக குற்றச்சாட்டு வனையப்பட்டன.

3) மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக, எதிரி சாட்சி–1 ஐ பெண் என்றும் பாராமல் அவர்களது பெண்மைக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் அவரை அசிங்கமாக பேசி, சாட்சி–1 ஐ அரிவாளால் தாக்கி சாதாரண காயத்தை ஏற்படுத்தி சாட்சி–1 ஆகியோர்களின் பெண்மைக்கு பங்கத்தையும், அவமானத்தையும் ஏற்படுத்திய குற்றத்திற்காக எதிரி மீது பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் தண்டிப்பதற்குரிய குற்றம் புரிந்ததாக குற்றச்சாட்டு வனையப்பட்டன.

3) மேற்படி வனையப்பட்ட குற்றச்சாட்டுக்களை எதிரிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, விளக்கப்பட்டு குற்றத்தை ஒத்துக்கொள்கிறீர்களா ? அல்லது விசாரணையை வேண்டுகிறீர்களா? என்று வினவப்பட்டது. அப்போது எதிரி குற்றச்சாட்டுக்களை மறுத்தார்.

4. இவ்வழக்கில் சாட்சி விசாரணை தொடங்குவதற்கு முன்பு எதிரி தரப்பில் கு.வி.மு.ச. 320 (2)ன் கீழ் சமரச மனு தாக்கல் செய்யப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டது.

5. இதற்குப்பின் அரசு தரப்பில் சாட்சிகளை ஆஜர்படுத்த உத்தரவிடப்பட்டது. அதனடிப்படையில், அரசு தரப்பில் மொத்தம் அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகள்விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. சான்று பொருட்கள் குறியீடு செய்யப்படவில்லை.

6. அரசு தரப்பு சாட்சிகள் விசாரிக்கப்பட்டபின், அவர்களது சாட்சியத்தில் எதிரிக்கு எதிரான சங்கதிகள் பற்றி நேரடியாக விளக்கம் பெறுவதற்காக கு.வி.மு.ச. பிரிவு 313(1)(b)–ன் கீழ் கேள்விகள் கேட்டபோது எதிரி பொய் என்று மறுத்தார்.

7. **<u>தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகள் :–</u>**

1) எதிரி மீதான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபித்துள்ளனரா?

2) எதிரி குற்றவாளி எனில், எதிரிக்கு வழங்கப்பட வேண்டிய தண்டனை என்ன?

**8. நிரூபண சுமை :–**

இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 101–ன் படி(BSA– 104) அரசு தரப்பில்தான் எதிரி குற்றத்தை செய்தார் என்பதை அரசு தரப்பு சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்க வேண்டிய சுமையானது (Burden of proof) அரசு தரப்பை சார்ந்ததாகும்.

9. **அரசு தரப்பு சாட்சியங்களும், பரிசீலனையும் :–**

9.1 இந்த வழக்கில் எதிரி மீது இது முதலாவது குற்றச்சாட்டு என்பதும், இவ்வழக்கின் புகார்தாரர் கடந்த 30.12.2018–ம் தேதி இரவு 19.00 மணிக்கு கீழ அழகுநாச்சியாபுரம் வடக்கு தெருவில் உள்ள அவரது வீட்டு முன்பு உட்கார்ந்து கொண்டிருந்தபோது புகார்தாரரின் வீட்டு முன்பு உள்ள கொடிக்கம்பம் அருகே எதிரி அமர்ந்து கொண்டு "கண்டாரஓலி மகன்களா தேவிடியா மக்களா உத்திக்கு உத்தி வாங்கடா" என்று கொச்சையாக பேசிக் கொண்டிருந்தவரை பார்த்து புகார்தாரர் பொம்பளபிள்ள மக்கள் இருக்கற இடத்துல ஏண்டா இப்படி அசிங்கமாக பேசுற என்று கேட்டதற்கு எதிரி புகார்தாரரை பெண் என்றும் பாராமல் அந்த பொது இடத்தில் வைத்து அப்படித்தான் பேசவேன் தேவிடியா மகளே என்று அசிங்கமாக பேசிய குற்றத்திற்காக எதிரி மீது இ.த.ச. பிரிவு 294(b)–ன் கீழ் தண்டிப்பதற்குரிய குற்றம் புரிந்தாரா? என்பதை அரசு தரப்பு சாட்சியத்திலிருந்து பின்வருமாறு பரிசீலனை செய்யலாம்.

9.2 மேற்படி முதல் குற்றச்சாட்டை இந்திய தண்டனைச்சட்டம் பிரிவு 294 உட்கூறுகள் அரசு தரப்பால் சந்தேகத்திற்கு அப்பால் நிரூபணம் செய்ய வேண்டும். அதன் ஊட்கூறுகள் பின்வருமாறு:–

**பிரிவு 294:– ஆபாசச் செயல்களும் பாடல்களும் :– மற்றவர்களுக்குத் தொந்தரவாக இருக்கும்படி –**

அ) பொதுவிடம் எதிலும் ஆபாசச் செயல் எதையும் செய்கிற, அல்லது

ஆ) பொதுவிடம் எதிலும் அல்லது அதற்கு அருகில், ஆபாசப் பாடல்கள், கதைப்பாடல் அல்லது சொற்கள் எதையும் பாடுகிற, ஒப்பிக்கிற, அல்லது மொழிகிற எவரும் – மூன்று மாதங்கள் வரை சிறைத்தண்டனையோ அல்லது அபராதமோ, அல்லது இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

9.3 சம்பவ இடமானது வடக்குத்தெரு, கீழஅழகுநாச்சியாபுரத்தில் உள்ள அ.சா.1 ன் வீட்டு முன்பு உள்ள இடம் ஆகும். இதனை அ.சா.1 சாட்சி மூலம் அறியலாம்.

மேற்படி பிரிவு 294(b) உட்கூறுகள் பொருந்தவேண்டும் எனில், சம்பவ இடமானது பொது இடமோ அல்லது பொது இடம் அருகில் ஏற்பட்டிருக்க வேண்டும் என கூறப்பட்டதிலிருந்தே இந்த அரசு தரப்பு வழக்கில் அதுபோன்று அ.சா.1 சாட்சி சம்பவ இடம் பொது இடம் என்றோ, பொது இடம் அருகில் என்றோ குறிப்பிட்டு சாட்சியமளிக்கவில்லை. குறிப்பாக, அ.சா.1 தனது நீதிமன்ற முதல் விசாரணை சாட்சியத்தில், "ஆஜர் எதிரியை தனக்கு தெரியும் என்றும், சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பாக தனது வீட்டின் முன்பாக நடந்து செல்லும்போது தனக்கு இடது கையில் காயம் ஏற்பட்டதாகவும், ஏற்பட்ட காயத்திற்கு அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது அங்கு வந்த போலீசாரிடம் எழுதாத வெள்ளைப் பேப்பரில் கையெழுத்து செய்து கொடுத்ததாகவும், தன்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் மட்டும் தன்னுடையதுதான் என்றும், அது அ.சா.ஆ–1 என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும்" சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சம்பவத்தால் பாதிக்கப்பட்ட அ.சா.1 –ன் சாட்சியங்களிலிருந்து எதிரிதான் அ.சா.1 ஐ பொது இடத்தில் வைத்து அசிங்கமான வார்த்தைகளால் பேசியதாகவும், அதனால், அ.சா.1 க்கு தொந்தரவு ஏற்பட்டது என்றும் குறிப்பிட்டு சாட்சியமளிக்கவில்லை. மேலும், மாறாக அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்து பிறழ் சாட்சியாக மாறியுள்ளார்கள். இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 294(b)–ன் கீழான குற்றச்சாட்டில் எதிரி தண்டிக்கப்பட வேண்டுமெனில், பாதிக்கப்பட்ட நபரை பொது மக்கள் மத்தியிலோ, பொது இடத்திலோ, பொது இடம் அருகிலோ பாதிக்கப்பட்டவரை அவமானப்படுத்த வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் ஆபாசமான அருவருக்கத்தக்க மொழி பேசியதால் பாதிக்கப்பட்டவருக்கு தொல்லை ஏற்படுத்தியதாக இருக்க வேண்டும். அப்படி எதுவும் இந்த வழக்கில் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பால் எதிரிக்கு எதிராக நிரூபணம் செய்யவில்லை என்பதை பரிசீலனை செய்து, **1) கே.ஜெயராம் மஞ்சு எதிர் ஜானகிராஜ் 1990 மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பின்படியும், 2) பவன்குமார் எதிர் ஹரியானா (1996) 4 SCC 17 என்ற மாண்பமை உச்சநீதிமன்ற தீர்ப்பில்**

> “ 294(b)பொருந்துவதற்கு மூன்று கடுமையான நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என தெளிவுபடுத்தியுள்ளனர். அவை பின்வருமாறு

(i) அந்த செயல் ஒரு பொது இடத்திலோ அல்லது அதன் அருகிலோ செய்யப்பட வேண்டும். அதாவது ஆபாசமான வார்த்தைகள் உச்சரிக்கப்பட வேண்டும்.

(ii) அந்த வார்த்தைகளோ அல்லது செயலோ உண்மையில் ஆபாசமானதாக இருக்க வேண்டும்.

(iii) அந்த ஆபாச வார்த்தை கேட்டதால் மற்றவர்களுக்கு தொந்தரவு ஏற்பட்டிருக்க வேண்டும்.

என்றும் கூறப்பட்டுள்ளது. மேலும், மாண்பமை உச்சநீதிமன்றம் **Mani @ Subramaniyam – Vs – State rep by The Deputy Superintendent of Police (17.07.2026) [ 2026 INSC 719] என்ற முன்தீர்ப்பில் பாரா 11, 17–ல்** பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

> 11. We would first examine whether the offence punishable under Section 294(b) IPC is made out against the appellant or not. Section 294 IPC reads as follows:
>
> "294. Obscene acts and songs.—Whoever, to the annoyance of others,
>
> (a) does any obscene act in any public place, or
>
> (b) sings, recites or utters any obscene song, ballad or words, in or near any public place,
>
> shall be punished with imprisonment of either description for a term which may extend to three months, or with fine, or with both."
>
> (emphasis supplied)
>
> **A plain reading of this Section shows that in order to secure a conviction under Section 294 IPC, the prosecution is required to prove two essential ingredients. *First*, the offender has done an *obscene* act in a public place or has sung, recited, or**

**uttered any *obscene* word, ballad or song in or near any public place. *Secondly*, such an act or utterance has caused annoyance to others.**

17. For an utterance to be considered *obscene*, it must be shown that it was lascivious, appealed to prurient interests and had the tendency to deprave and corrupt the minds of those who are exposed to it. Tested on this anvil, even if all the allegations levelled in the complaint are taken at their face value and accepted to be true in entirety, the same cannot be held to be *obscene*. Such words, howsoever abusive, unpalatable or uncivil, do not satisfy the requirement of Section 294(b) IPC for there being nothing on record to show that they had any one or all three elements referred to hereinabove. **Further, it is nobody's case that use of such words caused annoyance to others in a public place, which is a mandatory ingredient of the Section, much less to the complainant. In absence thereof, we find that the offence under Section 294(b) IPC is not made out.**

என்று கூறப்பட்டுள்ளது.

9.4. மேற்படி மாண்பமை உச்சநீதிமன்ற முன்தீர்ப்புகளின்படி அ.சா.1 ஐ எதிரி தன்னை அசிங்கமாக பேசியதால் தனக்கு தொந்தரவு (annoyance) ஏற்பட்டது என புகார் மனுவிலோ, 161 வாக்குமூலத்திலோ, நீதிமன்ற முதல் விசாரணை ஆகியவற்றில் குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை என்பதை அறியமுடிகிறது. மேற்படி அ.சா.1 ன் சாட்சியத்தின் மூலம் எதிரி மீதான இ.த.ச. பிரிவு 294(b) –ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பினரால் மேற்படி 294(b) உட்கூறுகளையும், மாண்மை உச்ச நீதிமன்றம், உயர்நீதிமன்றம் முன்தீர்ப்புகளில் கூறப்பட்டுள்ளதையும் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதி, எதிரியை இ.த.ச. பிரிவு 294(b)

குற்றச்சாட்டு மெய்ப்பிக்கப்படாததால் எதிரி குற்றவாளி இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

10. இந்த வழக்கில், எதிரி மீது இரண்டாவது குற்றச்சாட்டு என்பது எதிரி புகார்தாரரை கீழே தள்ளிவிட்டு எதிரி கையில் வைத்திருந்த அரிவாளால் புகார்தாரரின் இடது நெற்றியில் தாக்கி சாதாரண காயங்களை ஏற்படுத்திய குற்றத்திற்காக எதிரி மீது இ.த.ச. பிரிவு 324–ன் கீழ் தண்டிப்பதற்குரிய குற்றம் புரிந்தாரா? என்பதை அரசு தரப்பு சாட்சியத்திலிருந்து பின்வருமாறு பரிசீலனை செய்யலாம்.

10.1. மேற்படி இரண்டாவது குற்றச்சாட்டை இந்திய தண்டனைச்சட்டம் பிரிவு 319, 322, 324 உட்கூறுகள் அரசு தரப்பால் சந்தேகத்திற்கு அப்பால் நிரூபணம் செய்ய வேண்டும். அதன் ஊட்கூறுகள் பின்வருமாறு:–

10.2. **இந்திய தண்டனைச்சட்டம் பிரிவு 319 –** காயம் – ஒருவருக்கு உடல்வலி, நோய் அல்லது பலவீனம் விளைவிக்கிற எவரும் காயம் விளைவிக்கிறார் என்று சொல்லப்படுகிறார்.

10.3. **இந்திய தண்டனைச்சட்டம் பிரிவு 322– கொடுங்காயம் விளைவித்தல்** – ஒரு காயம் விளைவிப்பவரால், விளைவிக்கப்படும் காயம், கொடுங்காயமாக இருக்குமானாலும், அவர் கொடுங்காயம் விளைவிப்பதாகச் சொல்லப்படுவார்.

10.4. **இந்திய தண்டனைச்சட்டம் பிரிவு 324.** அபாயகரமான ஆயுதங்கள் அல்லது பொருட்கள் மூலம் காயம் விளைவித்தல் – 334 ஆவது பிரிவில் வகை செய்யப்பட்ட சந்தர்ப்பத்தின்படியல்லாது வேறுவகையில் தவிர, சுடுவதற்கு, குத்துவதற்கு, அல்லது வெட்டுவதற்கான கருவி எதன் மூலமேனும், அல்லது எந்தக் கருவியைத் தாக்கும் கருவியாகப் பயன்படுத்தினால் அநேகமாக மரணம் விளைவிக்கக்கூடுமோ அந்தக் கருவி எதன் மூலமேனும், அல்லது நெருப்பு அல்லது சுடுபொருள் எதன் மூலமேனும், நஞ்சு அல்லது அரிக்கும் தன்மையுள்ள பொருள் எதன் மூலமேனும், அல்லது வெடிக்கும் பொருள் எதன் மூலமேனும், அல்லது இரத்தத்தில் ஏற்றால் மனித உடலுக்குத் தீங்கு விளைவிக்கிற பொருள் எதன் மூலமேனும், அல்லது விலங்கு எதன் மூலமேனும், காயம் விளைவிக்கும் ஒருவர், மூன்று ஆண்டுகள் வரை சிறைத் தண்டனையோ, அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

10.5. இரண்டாவது குற்றச்சாட்டை பொறுத்து அ.சா.1 சாட்சி 161 வாக்குமூலத்தில் எதிரி அ.சா.1 ஐ கீழே தள்ளிவிட்டு கையில் வைத்திருந்த அருவாளைக் கொண்டு என் இடது நெற்றியில் கொத்திவிட்டான் என்று கூறியுள்ளார். ஆனால், அதன் தொடர்ச்சியாக நீதிமன்ற முதல் விசாரணையில் "ஆஜர் எதிரியை தனக்கு தெரியும் என்றும், சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பாக தனது வீட்டின் முன்பாக நடந்து செல்லும்போது தனக்கு இடது கையில் காயம் ஏற்பட்டதாகவும், ஏற்பட்ட காயத்திற்கு அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது அங்கு வந்த போலீசாரிடம் எழுதாத வெள்ளைப் பேப்பரில் கையெழுத்து செய்து கொடுத்ததாகவும், தன்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் மட்டும் தன்னுடையதுதான் என்றும், அது அ.சா.ஆ–1 என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும்" சாட்சியம் அளித்துள்ளார். அவரை குறுக்கு விசாரணை செய்தபோதும் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியமளிக்கவில்லை. மேற்படி இந்திய சாட்சிய சட்டத்தின் படியும், மாண்புமிகு உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற முன் தீர்ப்புகளின் அடிப்படையில் சாட்சியம் என்பது முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை இணைந்தது தான் சாட்சியம் என்ற சட்ட கோட்பாட்டின் அடிப்படையில் அ.சா.1–ன் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை சாட்சியத்தை இந்நீதிமன்றம் பரிசீலனை எடுத்துக்கொண்டு அ.சா.1–ன் சாட்சியம் நம்பும்படியும், சாட்சியத்திற்கு ஒத்துரைக்கும் விதமாக இல்லை (Collaboration) என இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

10.6. அதேபோன்று, அரசு தரப்பு வழக்கின் படி எதிரி கையில் வைத்திருந்த அரிவாளை வைத்து புகார்தாரரின் இடது நெற்றியில் கொத்தி சாதாரண காயத்தை ஏற்படுத்தினார் என்பதை வழக்கின் புலனாய்வு அதிகாரிக்கு பதிலாக சாட்சி சொல்ல வந்த அ.சா.2 அவர்களின் சாட்சியத்தில் மேற்படி, அரிவாளை அத்தாட்சி மூலம் கைப்பற்றப்பட்டு, படிவம்–91 தயாரிக்கப்பட்டதாக சாட்சியம் அளிக்கவில்லை. இவ்வழக்கில் அரிவாளை சான்றுபொருளாக குறியீடு செய்யப்படவில்லை என்பதையும் இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது. மேலும், இந்த அரசு தரப்பு வழக்கின்படி அ.சா.1 ஐ அரிவாளால் எதிரி தாக்கினார் என்று அ.சா.1 நீதிமன்ற சாட்சியத்தில் குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. மேலும் தங்களை எதிரி தாக்கியதாக சொல்லப்படும்

அரிவாளை அரசு தரப்பில் அ.சா.1ன் மூலம் அடையாளம் காட்டப்பட்டு அவர்கள் மூலமாக குறியீடு செய்யப்படவில்லை. வெறும் அரசு தரப்பு சாட்சியான அ.சா.2ன் சாட்சியத்தின் அடிப்படையிலும், மருத்துவ சாட்சியத்தை மட்டுமே வைத்து எதிரியை குற்றவாளி என தீர்மானிக்க இயலாது. மேலும், மருத்துவர் சாட்சியம் மற்றும் அ.சா.3 சாட்சியங்களோடு மற்ற அரசு தரப்பு சாட்சிகளான அ.சா.1 ஒத்துரைக்கவில்லை (Colloboration). எனவே, இந்த அரசு தரப்பு வழக்கை சந்தேகிக்கும் வகையில் உள்ளது.

10.7 ஆதலால் எதிரி அ.சா.1ன் இடது நெற்றியில் அரிவாளால் குத்தி சாதாரண காயத்தை ஏற்படுத்தினார் என்பதை அரசு தரப்பு மேற்படி அ.சா.1ன் சாட்சியத்தின் மூலம் எதிரி மீதான இ.த.ச. பிரிவு 324–ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பினரால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதி, எதிரியை இ.த.ச. பிரிவு 324 குற்றச்சாட்டு மெய்ப்பிக்கப்படாததால் எதிரி குற்றவாளி இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

11. இந்த வழக்கில் எதிரி மீது மூன்றாவது குற்றச்சாட்டு என்பது எதிரி சாட்சி–1ஐ பெண் என்றும் பாராமல் அவர்களது பெண்மைக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் அவரை அசிங்கமாக பேசி, சாட்சி–1ஐ அரிவாளால் தாக்கி சாதாரண காயத்தை ஏற்படுத்தி சாட்சி–1ன் பெண்மைக்கு பங்கத்தையும், அவமானத்தையும் ஏற்படுத்திய குற்றத்திற்காக எதிரி மீது பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் தண்டிப்பதற்குரிய குற்றம் புரிந்தாரா? என்பதை அரசு தரப்பு சாட்சியத்திலிருந்து பின்வருமாறு பரிசீலனை செய்யலாம்.

11.1 மேற்படி மூன்றாவது குற்றச்சாட்டை **பிரிவு 4 பெண்களுக்குத் தொல்லை கொடுத்தலுக்கான தண்டனையின் உட்கூறுகள் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது**

கல்வி நிலைய வளாகம், கோயில் அல்லது பிற வழிப்பாட்டுத்தலம், பேருந்து நிறுத்தம், சாலை, இரயில் நிலையம், திரையரங்கம், பூங்கா, கடற்கரை, திருவிழா நடைபெறும் இடம், பொதுமக்கள் பயன்படுத்தும் வாகனம் அல்லது கலம் அல்லது வேறு இடம் எதிலும் பெண்களுக்குத் தொல்லை கொடுக்கிற, தொல்லை கொடுப்பவருக்கு உடந்தையாக இருக்கின்ற எவரொருவரும் மூன்றாண்டுகள் வரை சிறைத்தண்டனையும் மற்றும் பத்தாயிரம் ரூபாய்க்கு குறைவாக அபராதமும் விதித்து தண்டிக்கப்படுதல் வேண்டும்.

**பிரிவு 2(அ) சொற்பொருள் விளக்கங்கள் :**

**அ) "தொந்தரவு"** என்பதன் பொருள், ஆண் ஒருவரால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு அநாகரிகமான நடத்தை, செயல் அல்லது செயல்முறை அது அச்சுறுத்தல், பயம், அவமானம் அல்லது சங்கடத்தை ஏற்படுத்தினால் அல்லது ஏற்படுத்தக்கூடியதாக இருந்தால் ; அதில் மிரட்டல், அவதூறு, காயப்படுத்துதல், இடையூறு செய்தல், தாக்குதல் அல்லது பலவந்தம் பயன்படுத்துதல் ஆகியவையும் அடங்கும்

11.2. மூன்றாவது குற்றச்சாட்டை பொறுத்து அ.சா.1 சாட்சி 161 வாக்குமூலத்தில், எதிரி அ.சா.1ஐ அசிங்கமாக பேசி, அரிவாளால் தாக்கி சாதாரண காயத்தை ஏற்படுத்தினார் என்று கூறியுள்ளார். அதன் தொடர்ச்சியாக நீதிமன்ற முதல் விசாரணையில், அ.சா.1 வழக்கு பற்றி எதுவும் தெரியாது என சாட்சியமளித்து அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்து பிறழ் சாட்சிகளாக மாறியுள்ளார். மேற்படி முதல் விசாரணை சாட்சியமானது முன்பு சொன்ன 161 வாக்குமூலம், ஆகியவற்றில் எதிரி அ.சா.1ன் பெண்மைக்கு பங்கம் விளைவித்ததாக நேரடியாக அ.சா.1 தான் பார்த்ததாக குறிப்பிட்டு சொல்லிவிட்டு நீதிமன்ற முதல் விசாரணை சாட்சியத்தில் தான் நேரடியாக சம்பவத்தை பார்க்காதது போன்று முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1ன் சாட்சியத்தை இந்நீதிமன்றம் பரிசீலனை எடுத்துக்கொண்டு அ.சா.1–ன் சாட்சியம் அரசு தரப்பை ஒத்துரைக்கும் விதமாக இல்லை (Collaboration) எனவும், எதிரி அ.சா.1–ன் பெண்மைக்கு பங்கம் விளைவித்ததாக அ.சா.1 சாட்சி இந்நீதிமன்றம் முதல் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை. மேற்படி பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் எதிரி தண்டிக்கப்பட வேண்டும் எனில் எதிரி நடத்தை, செயல் ஆகியவற்றால் அ.சா.1–ன் பெண்மைக்கு பங்கம் விளைவித்தல் ஏற்பட்டது என்பதை அரசு தரப்பில் சந்தேகித்திற்கு அப்பால் நிருபனம் செய்யவேண்டும். ஆனால் இந்த வழக்கில் அரசு தரப்பு மேற்படி அ.சா.1ன் சாட்சியத்தின் மூலம் எதிரி மீதான பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பினரால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதி, எதிரியை பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழான குற்றச்சாட்டு மெய்ப்பிக்கப்படாததால் எதிரி குற்றவாளி இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

13. மேலும், அ.சா.2 ஆன காவல்துறை அதிகாரியின் சாட்சியத்தை பரிசீலிக்கையில் அவர் தனது சாட்சியத்தில், இறுதியறிக்கையில் சொல்லப்பட்டுள்ள அரசு வழக்கிற்கு ஆதரமாக வழக்கு கோப்புகளின் அடிப்படையில் சாட்சியமளித்துள்ளார். அ.சா.2 ன் சாட்சியத்தின் மூலம், இவ்வழக்கின் புகார் மனு சம்மந்தமாக பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை குறித்தும், விசாரணை அதிகாரிகள் சம்பவ இடம் சென்று தயார் செய்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் குறித்தும் மட்டுமே தெரிய வருகிறது. இந்நிலையில் இவ்வழக்கில் புகார் மனு கொடுத்ததாக அரசு தரப்பில் சுட்டிக்காட்டப்படும் அ.சா.1 அரசு தரப்பு வழக்கிற்கு விரோதமாக பிறழ் சாட்சியம் அளித்துள்ள நிலையில், வழக்கு கோப்புகளை மட்டுமே பார்வையிட்டு அதனடிப்படையில் சாட்சியம் அளித்துள்ள அ.சா.2–ன் சாட்சியத்தை மட்டும் வைத்துக்கொண்டு, எதிரி மீதான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுவிட்டதாக இந்நீதிமன்றம் தீர்மானிக்க இயலாது என்றும் இந்நீதிமன்றம் கருதி எதிரியை இ.த.ச. பிரிவுகள் 294(b), 324 மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றவாளி இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

14) **<u>எதிரி குற்றவாளிகள் எனில், எதிரிகளுக்கு வழங்கப்பட வேண்டிய தண்டனை என்ன?</u>**

14.1 மேற்படி அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட இ.த.ச. பிரிவுகள் 294(b), 324 மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பால் நிருபணம் செய்யவில்லை என இந்நீதிமன்றம் தீர்மானிக்கப்பட்டுள்ளதால் எதிரிக்கு எந்தவித தண்டனையும் வழங்க இயலாது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

15. இறுதியாக, எதிரி இ.த.ச. பிரிவுகள் 294(b), 324 மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழான குற்றச்சாட்டுக்கள் கீழ் குற்றவாளி இல்லை என தீர்மானித்து எதிரியை கு.வி.மு.ச.பிரிவு 248(1)–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. எதிரி ஏற்கனேவே இவ்வழக்கு சம்மந்தமாக

இந்நீதிமன்றத்தில் வழங்கியிருந்த பிணை முறிவு பத்திரத்தை மேல்முறையீடு காலம் முடிந்த பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

16. இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படாததால் அது குறித்து உத்தரவு ஏதுமில்லை.

என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் பிழை திருத்தம் மேற்கொள்ளப்பட்டு 2026–ம் ஆண்டு ஆகஸ்ட் செவ்வாய்க்கிழமை, 11–ம் நாளான இன்று என்னால் இந்தத் தீர்ப்புரை அவையறிப்பகரப்பட்டது.

M MARI Digitally signed by M MARI Date: 2026.08.11 18:24:27 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
சங்கரன்கோவில்.

**அரசுத் தரப்பு சாட்சிகள்:**

1. அ.சா.1 திருமதி. தவமணி (நிகழ்நிலை புகார்தாரர்)
2. அ.சா.2 திரு.செல்லத்துரை (தலைமைக் காவலர், குருவிகுளம் காவல் நிலையம்)

**அரசுத் தரப்பு சான்றாவணங்கள்:**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 31.12.2018 | புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.1 ன் கையெழுத்து |
| அ.சா.ஆ.2 | 31.12.2018 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.3 | 31.12.2018 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | 31.12.2018 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.5 | 31.12.2018 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.6 | 30.12.2018 | அ.சா.1 ன் காயச்சான்றிதழ் |

**அரசு தரப்பு சான்று பொருட்கள் :** இல்லை

**எதிரிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை.

M MARI Digitally signed by M MARI Date: 2026.08.11 18:24:33 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
சங்கரன்கோவில்.